செய்தி வெளியீடு எண். 40 நாள்: 20.01.2018

**நாடாளுமன்றத்தின் ஊரக வளர்ச்சிக்கான நிலைக்குழுவின் தலைவர் டாக்டர். பி.வேணுகோபால் அவர்கள், உறுப்பினர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களை பார்வையிட்டனர்**

திருவள்ளூர் மாவட்டத்தில், நாடாளுமன்றத்தின் ஊரக வளர்ச்சிக்கான நிலைக்குழுவின் தலைவர் டாக்டர். பி.வேணுகோபால் அவர்கள், உறுப்பினர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களை இன்று (20.01.2018) பார்வையிட்டனர்

நாடாளுமன்றத்தின் ஊரக வளர்ச்சி நிலைக்குழு தலைவர் டாக்டர். பி.வேணுகோபால், உறுப்பினர்கள் திருவாளர்கள், ஜுகல் கிஷோர் சர்மா, டாக்டர் யஸ்வந்த் சிங், லடு கிஷோர் சுவைன், ஜாவேத் அலிகான், ஏவி சுவாமி, திருமதி. சாந்தா செட்ரி ஆகியோர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சியின் மூலமாக மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை பார்வையிட்டனர்.

எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், புன்னப்பாக்கம் ஊராட்சியில் ஒருங்கிணைந்த நீர்வடி பகுதி மேலாண்மை திட்டத்தின் சார்பாக கேவிஎன் தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளதையும், நிலத்தடி நீர்மட்ட செறிவூட்டும் அமைப்புகளையும் மற்றும் ஒரு ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள மல்லிகை பூந்தோட்டத்தையும் பார்வையிட்டனர். தாராட்சியில் ஒரு ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள மல்லிகைப் பூந்தோட்டத்தை பார்வையிட்டனர். ஒருங்கிணைந்த நீர்வடி பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு 80 சதவிகிதம் மானியத்தில் ரூ. 12 ஆயிரம் மதிப்பிலான தையல் இயந்திரங்களையும், 80 சதவிகிதம் மானியத்தில் தார்பாலின் மற்றும் 80 சதவிகிதம் மானியத்தில் ரூ. 1500 மதிப்பிலான வேளாண் உபகரணங்களையும் வழங்கினார்கள்.

பூண்டி ஊராட்சி ஒன்றியம், பூண்டி ஊராட்சியில் மாவட்ட தொழில் மையம் சார்பாக ஸ்டான்ட் அப் இந்தியா திட்டத்தில் பல்வேறு திட்டங்களின் கீழ் 20 நபர்களுக்கு ரூ. 95.31 இலட்சம் மதிப்பிலான வங்கி கடன் உதவிக்கான ஆணைகள் மற்றும் காசோலைகளை வழங்கினார்கள். இந்திராகாந்தி தேசிய விதவை உதவித்தொகை திட்டத்தின் கீழ் 23 நபர்களுக்கும் ஆணைகளை வழங்கினார்கள்.

பூண்டி ஊராட்சி ஒன்றியம், பூண்டி ஊராட்சி, ரங்காபுரம் பழங்குடியினர் காலனியில் புரதம் மந்திரி ஆவாஸ் யோஜனா (கிராமின்) திட்டத்தின் கீழ் ரூ. 83.66 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள தெரு விளக்கு வசதி, நீர்தேக்க தொட்டிகளின் மூலம் குடிநீர் வழங்குதல், தனிநபர் இல்லக் கழிவறைகள் அமைத்தல், பசுமை வீடுகள் கட்டுதல், சாலைகள் மற்றும் பிற வசதிகள் அமைக்கப்படுவதை பார்வையிட்டனர்.

பின்னர், திருத்தணி ஊராட்சி ஒன்றியம், வேளஞ்சேரி ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள கேவிஎன் தடுப்பணை மற்றும் 1500 மீட்டர் நீளத்தில் உள்ள நீர்வரத்து கால்வாய் ஆகியவற்றை பார்வையிட்டனர். ஒருங்கிணைந்த நீர்வடி பகுதி மேலாண்மை திட்டத்தின் கீழ் 80 சதவிகிதம் மானியத்தில் ரூ. 1500 மதிப்பிலான வேளாண் உபகரணங்களையும், மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடன் உதவிகளையும் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கே.எஸ். விஜயகுமார் (கும்மிடிப்பூண்டி), திரு.பி.எம்.நரசிம்மன்(திருத்தணி), திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திரு.ச.சா.குமார், திருவள்ளுர்-காஞ்சிபுரம் ஆவின் பால் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.த.சந்திரன், பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) திரு.கே.ரவி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளுர்.**